# இறைவனின் தாயே இதயத்தில் நீயே

இறைவனின் தாயே இதயத்தில் நீயே
வாழ்த்துக்கள் பாடுவோம்
உந்தன் பாதம் சேருவோம்
உந்தன் நாம் போற்றுவோம்

**1)**
அருள் நிறைமரியே மாமரியே
அருள்தனைப் பொழிவாய் இராக்கினியே
புதுமைகள் புரிந்திடும் தூயவளே
புவிக்கெல்லாம் அன்னையாய் திகழ்பவளே
உந்தன் பாதம் நாடிவந்தோம்
உம்மை என்றும் தேடிவந்தோம் - 2
திருமகன் தாய் மரியே என்றென்றும் நீ
மங்கையர் குலவிளக்கே லலா.. -2

**2)**
நீதியும் நேர்மையும் நிறைந்தவளே
இறையருள் எமக்காய் வேண்டுமம்மா
தேவைகள் யாவையும் தருபவரே
வேண்டிய வரங்களைத் தாருமம்மா
உந்தன் பாதம் நாடிவந்தோம்
உம்மை என்றும் தேடிவந்தோம் - 2
திருமகன் தாய் மரியே என்றென்றும் நீ
மங்கையர் குலவிளக்கே லலா..